முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 139/2017

**வாதி தரப்பு சாட்சி–1 தனலெட்சுமி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) நான் இவ்வழக்குரையில் எத்தனை அயிட்ட சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் சரியாக தெரியவில்லை. நான் வழக்குரையில் 3 அயிட்ட சொத்துக்களை காட்டியுள்ளேன், அதில் A அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். எந்த அயிட்ட சொத்திற்கு நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், C அயிட்ட சொத்திற்கு கேட்டுள்ளேன். A அயிட்ட சொத்தின் கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியுமா என்றால், கிழமேல் 33 அடி, தென்வடல் 66 அடி ஆகும். B அயிட்ட சொத்தின் கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை. 1ம் பிரதிவாதியுடன் பிறந்தவர்கள் பானுமதி, அஞ்சலை. மூவரின் தகப்பனார் பெயர் வெள்ளையன். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்திற்கு கிழக்குபுறம் மூவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால், அதுபற்றி தெரியாது.

2) பானுமதி, அஞ்சலை இருவரையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வெள்ளையனுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், சர்வே எண் 208, உட்பிரிவு தெரியவில்லை. தாவா சொத்தில் எனது தகப்பனார் முருகன் ஆரம்பத்தில் நான்குபுறம் சுவர் எழுப்பி கூரை வீடு கட்டியிருந்தாரா என்றால் ஆமாம். அவ்வாறு கூரை வீடு கட்டியது எப்போது என்றால் எனக்கு சிறுவயதாக இருந்த போதே கட்டப்பட்டது. சுமார் 40 வருடங்களுக்கு மேல் இருக்கும். அந்த வீட்டில்தான் நான் எனது பெற்றோருடன் குடியிருந்து வந்தேனா என்றால் ஆமாம். எனது தகப்பனார் எந்த

வருடம் இறந்தார் என்றால் 1998 ல் இறந்தார். அவர் இறந்த போது கூரை வீடாக இருந்ததா என்றால், கூரை வீடு, ஓட்டு வீடு இரண்டு வீடு இருந்தது. எனது தகப்பனார் இருந்த போதே மேற்படி சொத்திற்கு பட்டா ஏற்பட்டதா என்றால் ஆமாம்.

3) எனது தகப்பனார் இருந்த போது எந்த அளவிற்கு பட்டா கொடுத்தார்களோ அதே அளவில்தான் தற்போதும் உள்ளதா என்றால் ஆமாம். எனது தாயார் எந்த தேதி, எந்த வருடத்தில் என்ன ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் 2012 ம் வருடம் தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார், தேதி ஞாபகமில்லை. எத்தனை செண்ட் நிலம் எனது தாயார் தானமாக கொடுத்தார் என்றால் சரியாக தெரியவில்லை. தான செட்டில்மென்ட் ஆவணத்தைத் தவிர வேறு ஆவணங்கள் எதுவும் எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2012 ம் வருடம் எனது தாயார் தான செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்த பின்னிட்டு அதே வீட்டில்தான் வசித்து வந்தாரா என்றால் ஆமாம். தான செட்டில்மென்ட் ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் பசுபதி என்பவர் போட்டுள்ளார், மற்றொருவர் பெயர் தெரியவில்லை.

4) தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்ட போது அந்த சொத்தின் கிழக்குபுறம் வெள்ளையன் குடும்பத்தார் குடியிருந்து வந்தனர் என்றால் சரிதான். தான செட்டில்மென்ட் ஆவணத்தில் சொத்து விபரத்தில் நான்குபுற எல்லை என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்குபுற எல்லையாக வெள்ளையன் வீட்டிற்கு மேற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல எனக்கு பாத்தியப்பட்ட சுவருக்கு மேற்கு என வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வெள்ளையன் குடும்பத்தினர் அனுபவித்து வரும் இடம் எனது இடத்தின் அதே அளவுடையதா அல்லது அளவில் மாறுபாடு உள்ளதா என்றால், ஒரே அளவு இடம்தான் உள்ளது.

நான் சொல்வது போல 2012 ம் வருடம் எனது தாயார் எனக்கு எந்த தான செட்டில்மென்ட் ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5) உண்மையில் அவ்வாறு ஒரு ஆவணம் எழுதப்பட்டிருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு எந்த ஆவணமும் எழுதப்படாததால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தான செட்டில்மென்ட் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த போது என் பெயரில் பட்டா மாறிவிட்டதா என்றால் மாறிவிட்டது. என் பெயரில் உள்ள பட்டாவை தான செட்டில்மென்ட் அடிப்படையில்தான் மாற்றினேனா என்றால் ஆமாம். எனக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்தில் நான் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 2014 ம் வருடம் கட்டினேன். நான் வீடுகட்ட ஆரம்பிப்பதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை.

6) புதிதாக வீடுகட்ட வேண்டும் என்றால் கிராமப்புற நகராட்சியில் கட்டிட அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பெறப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக தெரியவில்லை. தாவா சொத்தில் வீடுகட்டி நான், எனது கணவர், குழந்தைகளுடன் இருக்கிறேனா என்றால் ஆமாம். இவ்வழக்கின் 2 ம் வாதி என் கணவர் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். 2 ம் வாதியை எதற்காக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், வீட்டின் வரவு செலவு அனைத்தையும் அவர்தான் பார்த்து வருகிறார். தாவா சொத்தின் விபரங்கள் அவருக்குத்தான் தெரியும் என்பதால் அவரை சேர்த்துள்ளேன். எனது சொத்திற்கு மேற்கு புறம் ராசு என்பவர் இடம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் என்ன விஸ்தீரணம் உள்ளதோ அதே அளவுதான் ராசு வீட்டிற்கும் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

7) ராசு தனது இடத்தில் வீடுகட்டி வசித்து வருகிறாரா என்றால், வீடு கட்டியுள்ளார், அவரது மகன்கள் அதில் வசித்து வருகிறார்கள். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ள விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் நியமன மனு நான்தான் போட்டேன் என்றால் சரிதான். சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பற்றி தெரிந்து கொள்ளவில்லையா என்றால் எனது கணவருக்குத்தான் தெரியும். இவ்வழக்கில் நான் கற்பனையாக C அயிட்டம் என்ற ஒன்றை காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்ட பட்டாவில் கண்டுள்ள அதே அளவில் நான் தற்போது வீடுகட்டி வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல, 2 அடி விட்டுதான் வீடுகட்டியுள்ளேன்.

8) நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் புதிதாக வீடுகட்டி பிரதிவாதிகளுக்கு இடையூறு கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது அறிவிப்புக்கு மேற்படி சங்கதிகள் பொய்யானது என பிரதிவாதிகள் முறையாக பதில் அறிவிப்பு கொடுத்துள்ளனர் என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி அவர்களை அச்சுறுத்தும் நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு எதிராக சாட்சியம் அளிக்க முரண்தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9) எனக்கு இவ்வழக்கின் விபரமும், ஆவணங்களின் விபரமும் நன்கு தெரிந்தும், உண்மையை கூறினார் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பட்டா, வீட்டுவரி ரசீது ஆகியவை என் தரப்பு வழக்கை நிரூபிக்க

போதுமான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. A, B அயிட்ட சொத்துக்களை பொறுத்து எந்த பரிகாரமும் கேட்காமல், C அயிட்ட சொத்திற்கு மட்டும் பரிகாரம் கேட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக சுவர் எழுப்பி ஓட்டு வீடு கட்டி தனது வீட்டின் தாழ்வாரமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, அந்த சுவர் எனது தகப்பனார் கட்டியது. எனது தகப்பனார் கட்டியதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சுவரை பஞ்சாயத்தார் மூலம் நீக்க சொல்லி பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதாகவும், பின்னிட்டு மறுத்து விட்டதாகவும் வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ள பஞ்சாயத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் சரியாக தேதி தெரியவில்லை.

10) பிரதிவாதிகள் அமைதியான முறையில் சுவர் எழுப்பி அதில் தங்கள் வீட்டின் தாழ்வாரத்தை அமைத்து பயன்படுத்தி வருவதை இடையூறு செய்யவேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2014ம் வருடம் நான் வீடுகட்டும் போது பிரதிவாதிகள் எந்த இடையூறும் செய்யாமல் எங்களுக்கு உதவியாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவருக்குத்தான் அனைத்து விபரங்களும் தெரியும் என நான் கூறுவது பொய் என்றும், அவரை இவ்வழக்கில் தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**